தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை. 1981, மே 12.

சித்திரை 30, துன்மதி திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்''

மனம் கலங்காமல் ஆராய்ந்து துணிந்து ஏற்ற தொழிலைச் சோர்வு கொள்ளாமல் காலந்தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மின்வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள்.

*வினா எண். 1064. திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் எத்தனை?

(ஆ) மின்சார வாரியம் தொழிற்சங்கங்களை அங்கீகரிப்பதில் மேற்கொள்ளும் விதிமுறைகள் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒன்பது அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் பணியாளர் தொகுதிச் சங்கங்கள் உள்ளன.

ஆ) தொழில் ஒழுங்குமுறை விதிகள் (Code of discipline (industry) மற்றும் தொழிற்சங்கங்களை அங்கீகரிப்பதற்காக 1963 ஆம் ஆண்டில் வாரியத்தால் உருவாக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் தொழிற்சங்கங்கள்/ பணியாளர் தொகுதிச் சங்கங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, தொழிற்சங்கங்களுடைய அங்கீகாரத்திற்காக மின்வாரியத்தால் குறிப்பிடக்கூடிய சில ஒழுங்குவிதிமுறைகளை ஏற்றுக்கொண்டு அந்த சங்கங்களை அங்கீகரிப்பது என்பது இப்போது நடக்கிற முறை. அங்கத்தினர்களுடைய எண்ணிக்கையைப் பரிசீலனை செய்து நடத்தப்படு? கிறதா? அல்லது வேறு எந்த விதத்தில் நடத்தப்படுகிறது சங்கங்களுக்கு பேலட் வைத்து அதிலே பெருவாரியாக

வோட்டு கிடைக்கக்கூடிய அவர்களை அங்கீகரிக்க அந்த ஒழுங்கு விதிமுறைகளை வைத்துக்கொண்டு அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மின்வாரியத்தில் சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 45லிருந்து 50சங்கங்கள் வரையில் உள்ளன. அவற்றில் 1963 ஆம் ஆண்டு சங்கங்களை அங்கீகரிப்பதற்கு சில விதிமுறைகள் மின்வாரியத்தாலே வகுக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் 1967 ஆம் ஆண்டு பெடரேஷன், அக்கவுன்டன்ட்ஸ் சபார்டினேட் யூனியன் அங்கீகரிக்கப்பட்டன. அதற்கு அடுத்து கோட் ஆப் டிசிப்ளின்படி அந்த சங்கங்கள் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றன.பெடரேஷனைப்பொறுத்தவரையில் அவர்கள் அங்கீகாரம் கேட்டபோது வேறு எந்த சங்கமும் அங்கீகாரம் கேட்காததாலே 1963 ஆம் ஆண்டே அங்கீகாரம் பெற்று தொடர்ந்து வைத்திருக்கின்றனர். ஏ. எஸ்.யு.—வைப் பொறுத்தவரையில் மெம்பர்களை வெரிபிகேஷன் பண்ணி 1969 இல் கோட் ஆப் டிசிப்ளின்படி அங்கீகாரம் செய்யப்பட்டிருக்கின்றன. மற்ற சங்கங்கள் அங்கீகாரம் செய்யப்படாமல் இருக்கின்றன. பழைய 1963 ஆம் ஆண்டு விதிகளின்படி தனியாக, லாஸ்ட் கிரேட் சர்வென்ட்ஸ் சங்கம், சூப்ரவைசர்ஸ் சங்கம் என்றெல்லாம் 6 சங்கங்கள் அங்கீகாரம் செய்யப்பட்டிருக்கின்றன.மெம்பர்களைச் சரிபார்த்து கணக்குப் பார்த்து அங்கீகாரம் வழங்கப்பட்டமுறை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் ரகசிய வாக்கெடுப்பிலே அதைச் செய்யமுடியுமா என்று கேட்கிறார்கள். அது கொள்கை பற்றிய பிரச்சினை,

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1963வது ஆண்டின் விதியின் பிரகாரம் 9 சங்கங்கள் அங்கீகாரம் செய்யப்பட்டதாகவும் 1969 ஆம் ஆண்டு 6 சங்கங்கள் அங்கீகரிக்கப்பட்டதாகவும் கூறினார்கள். அந்த 9 சங்கங்களிலே தொழில்நுட்பம் சார்ந்த அலுவலர்கள் சங்கங்கள் எத்தனை, எழுத்தர்கள் சங்கங்கள் எத்தனை, கடைநிலை ஊழியர்கள்-லைன்மேன் போன்றவர்கள் இருக்கின்ற சங்கங்கள் எத்தனை? எந்த ஆண்டிலே அவைகள் எல்லாம் அங்கீகரிக்கப்பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தொழிலாளர்களுக்காக 1963—வது ஆண்டு விதிகளின்படி 1967 இல் பெடரேஷன் அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறது. கணக்காயர்களுக்காக 1969 லிருந்து அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கடைநிலை ஊழியர்களுக்கு 1969 ஆம் ஆண்டு அங்கீகாரம் பகுதி சர்வீஸ் அசோஸியேஷன் ரூல்ஸிலே, அங்கீகாரம் தரப்பட்டு இருக்கிறது. சூப்ரவைசர்ஸ் சங்கங்களுக்கு அங்கீகாரம் தரப்பட்டு இருக்கிறது.

1981 மே 12]

அக்கவுண்ட்ஸ் அண்ட் ஆடிட் ஸ்டாஃப் யூனியன் தமிழ்நாடு செயலகத்திலே இருக்கக்கூடிய அந்தச் சங்கத்திற்கு அங்கீகாரம் 70 ஆம் ஆண்டிலிருந்து தரப்பட்டிருக்கிறது. டி.என்.இ.பி. செக்ரட்டேரியட் அசோசியேஷனுக்கு 70 ஆம் ஆண்டிலிருந்து அங்கீகாரம் தரப்பட்டிருக்கிறது. டிராப்ட்ஸ்மென் அண்ட் டிரேசர்ஸ் யூனியனுக்கு 70 ஆம் ஆண்டிலிருந்து அங்கீகாரம் தரப்பட்டிருக்கிறது. அக்கவுண்ட்ஸ் ஆபீசர்ஸ் அசோசியேஷனுக்கும் 70 ஆம் ஆண்டிலிருந்து அங்கீகாரம் தரப்பட்டிருக்கிறது. என்ஜினியர்ஸ் அசோசியேஷனுக்கு 1957 ஆம் ஆண்டிலிருந்து அதாவது போர்டு உருவாவதற்கு முன்னரேயே சர்வீஸ் அசோசியேஷன் என்கிற முறையிலே அங்கீகாரம் தரப்பட்டு அது தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இரகசிய வாக்கெடுப்பு விஷயமாகக் கொள்கைப் பிரச்னை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் இப்பொழுது ஒரு ஃபேக்ட் பிரச்னைக்குப் போகிறேன். அதை வைத்துத்தான் நான் கேள்வி கேட்கப் போகிறேன். இங்கே பக்கத்தில் இருக்கும் செக்ரட்டேரியட் அசோசியேஷன்—மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கத்தினராக இருந்து கொண்டிருக்கும் அதே கேபினட்டின் கீழ் செக்ரட்டேரியட் அசோசியேஷனிலே செக்ஷன் ஆபீசர்ஸைப் பொறுத்தவரைக்கும் தனியாக வாக்கெடுப்பு வைத்துக்கொண்டு, கடைசியிலே அவர்களுக்கு அங்கீகாரம் வாக்கெடுப்பு அடிப்படையில் கொடுத்திருக்கும்பொழுது அரசாங்கம் வாக்கெடுப்பு என்பதை ஏற்றுக்கொண்டாகிவிட்டது என்று வந்தபிறகு, அந்த ஃபேக்டை ஏன் எலக்ட்ரிசிட்டி போர்டிலே அப்ளை செய்யக்கூடாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மின் வாரிய ஆலோசனைக் குழுவில் பரிசீலிக்கலாம்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்கின்ற கொள்கையை ஏற்று அதுவும் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் அதில் எது பிரதானமுள்ள சங்கம் என்பதைத் தீர்மானிப்பதில் அரசுக்கு என்ன சிரமம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதில் அரசுக்கு ஒன்றும் சிரமமில்லை. தொழிலாளர்கள்தான் பல சங்கங்களை வைத்துக் கொள்கிறார்கள்.

மேலசெழுவனூர் காட்டு நிலப்பகுதிகள்

*வினா எண். 1065– திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் வட்டம் மேலசெழுவனூர் ரிசர்வ் பாரஸ்டில் உள்ள இடங்களை நிலமில்லாத ஏழைகளுக்கு பட்டா கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா?